பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 சிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. F.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 5 (18—6—68) செவ்வாய் ★ வெளியூர்: ஆனி 6 (19—6—68) புதன் [இதழ்: 3

இந்தியாவுக்கு தாய்லாந்து அரிசி

புதுடில்லி, ஜுன் 17—
இந்தியாவுக்கு 80 000 டன் அரிசி வழங்க தாய்லாந்து அரசு ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. அரசுக் கணக்கில் இந்த அரிசி தரப்படும்.

முதலில் வர்த்தக அடிப்படையில் 50,000 டன் அரிசி மட்டுமே தரத் தாய்லாந்து அரசு விருப்பம் தெரிவித்திருந்தது.

அவசரகாலத்தில் பயன்படுத்துவதற்காக இந்த அரிசி இருப்பில் வைத்துக் கொள்ளப்படும் என்று தெரிகிறது.

தாய்லாந்து அரிசி ஜூலையிலிருந்து வர ஆரம்பிக்கும். செப்டம்பருக்குள் 80,000 டன் அரிசியும் வந்துவிடும்.

ஆவடி வாகனக்கிடங்கு மூடப்படும்

வட நாட்டுக்குக் கொண்டு செல்ல டில்லி முடிவு?

ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழக்கும் அவல நிலை

சென்னை, ஜூலை 18—
ஆவடியிலுள்ள மத்திய வாகனக் கிடங்கு விரைவில் மூடப்பட்டு அக்கிடங்குகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த பணிகள் அனைத்தும் நாட்டில் தற்போது இயங்கிவரும் கிடங்குகளுக்கோ அல்லது புதிதாக அமைக்கப்படவிருக்கும் கிடங்குக்கோ மாற்றப்படும் என்று தெரிகிறது.

கடந்த உலகப் போரின்போது ஆவடியிலுள்ள ஐந்து கிடங்குகளில் மட்டும் ஏறத்தாழ 50,000 பேர் பணியாற்றினர். கும்மிடிப்பூண்டியில் மூடப்பட்ட வெடிமருந்துத் தொழிற்சாலையும் பாதுகாப்புத் துறையில் முக்கியக் கிடங்காகச் செயல்பட்டிருக்கிறது.

இந்தியா விடுதலை பெற்றபின் போர் அபாயம் அவ்வப்போது ஏற்படுகின்ற இடங்களிலிருந்து தென்னாடு வெகு தொலைவில் இருக்கிறது என்று காரணம் காட்டப்பட்டு, ஆவடியிலுள்ள கிடங்குகளும், தென்னாட்டிலுள்ள மற்றக் கிடங்குகளும் இப்போது வடநாட்டிற்கு மாற்றப்படவிருக்கின்றன !

தற்போது ஆயிரக்கணக்கில் ஆவடிக் கிடங்குகளில் பணியாற்றும் ஊழியர்கள், நாட்டில் உள்ள மற்றக் கிடங்குகளுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர். வேறு இடங்களுக்குச் சென்று பணிபுரிய முடியாத நிலையில் உள்ள தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கிவருவதாகவும் அறியப்படுகிறது.

இரண்டாவது உலகப் போருக்குப்பின் மூடப்பட்ட இராணுவத் தளவாடத் தொழிற்சாலை தற்போது பாதுகாப்புத் துறைப் பணிகளுக்குத் தேவையான . எல்லா வகையான வாகனங்களையும் சேகரித்து வைக்கும் மத்திய அரசுக் கிடங்காகச் செயல்பட்டுவருவதுடன், படைகட்குத் தேவையான எல்லா வகையான வாகனங்களையும் பல்வேறு இடங்களுக்கு அனுப்பும் பணியினையும் மேற்கொண்டிருக்கிறது.

இந்தக் கிடங்கு முடப்படும் நிலை ஏற்பட்டிருப்பதால், கடந்த சில நாட்களாகவே இதில் ஆற்றப்பட்டுவரும் பணிகள் அனைத்தும் மந்த நிலையிலேயே உள்ளன.

உள்நாட்டில் தயாராகும் மோட்டார் சைக்கிள்களைத் தவிர பாதுகாப்புத் துறைக்குத் தேவையான எந்தவகை வாகனங்களும், இச்கிடங்கில் சேரித்து வைக்கப்படுவதற்காகத் தற்போது வாங்கப்படவில்லை என்றும் தெரிகிறது.

புதிதாக வாங்கப்படும் வாகனங்களும், பயன்படுத்தப்பட்டுத் திரும்ப அனுப்பப்படும் வாகனங்களும் தற்போது ஆவடியில் உள்ள கிடங்கில் வைக்கப்படாமல் பூனாவிற்கு அருகிலுள்ள 'தேகு' என்ற இடத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

பயன்படுத்தப்பட்டுத் தேவையில்லாத பாதுகாப்புத்துறை வாகனங்கள் ஏலம் விடப்படும் முக்கியக் கிடங்குகளில் ஆவடிக் கிடங்கும் ஒன்றாகும்.

இதைப்போல் பூனாவிலுள்ளசில கிடங்குகளை மூடவேண்டும் என்று முயற்சி செய்தபோது, மாராட்டிர மாநில அரசும், அரசியல் கட்சித் தலைவர்களும் அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படவும், வாணிபம் பெருகவும், மற்றும் தொழிற்சாலைகள் வளரவுமான நிலையை உருவாக்குகின்ற இக்கிடங்குகளை மூடக்கூடாது என்று வன்மையாகக் கண்டித்து எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தீ விபத்துப் பகுதிகளில் அமைச்சர் கருணாநிதி

பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறினர்

சென்னை, ஜுன் 18—
சென்னை நகரில் 6-வது நாளாக நேற்றும் தொடர்ந்து தீ விபத்துக்கள் ஏற்பட்டன.

நேற்று மட்டும் 15 இடங்களில் தீப்பற்றியதாகச் செய்தி கிடைத்துள்ளது.

அவற்றில் இரண்டிடங்களில் பெரிய தீ விபத்துக்கள் ஏற்பட்டன.

நேற்று தீ விபத்து ஏற்பட்ட பலவேறு பகுதிகட்கும், அமைச்சர் கருணாநிதி அவர்கள் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

மற்றும் முரசொலி மாறன் எம்.பி., ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ ஆகியோரும் சென்று ஆறுதல் கூறிவந்தார்.

தீ விபத்துக்கள் நிகழ்ந்த இடங்களில் அந்தந்த வட்ட மாநகராட்சி உறுப்பினர்களும், சீரணித்தொண்டர்களும், ஏனைய கழகத் தோழர்களும நிவாரணப்பணிகளில் ஈடுபட்டனர்.

வாக்காளரை ஏற்றிச் செல்லும் வண்டிகள் பறிமுதலாகும்

கட்சிகளும் செலவுக் கணக்கு காட்டவேண்டும்

தேர்தல் சட்டத்தில் புதிய திருத்தம் வரலாம்

புதுடில்லி, ஜுன் 18—
தேர்தல் சட்டத்தில் பல முக்கியத் திருத்தங்களை அரசுக்கு சிபாரிசு செய்யத் தேர்தல் குழு கருதியுள்ளது.

பல்வேறு மாநிலங்களின் தேர்தல் அதிகாரிகள் மாநாடு உதகமண்டலத்தில் செப்டம்பர் முதல் வாரத்தில் நடைபெறக்கூடும். அப்பொழுது சட்டத்துக்கும், விதிகளுக்கும் திருத்தம் செய்வதுபற்றி விவாதிக்கப்படும்.

தேர்தலின்போது வாக்குச் சாவடிகளுக்கு வாக்காளர்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளைப் பறிமுதல் செய்வது ஒரு திருத்தமாகும்.

தங்கள் வேட்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் தாங்கள் செய்யும் செலவுபற்றி அறிக்கை தாக்கல் செய்ய அரசியல் கட்சிகள் கேட்டுக்கொள்ளப்பட வேண்டுமென்றும் கருதப்படுகிறது.

சட்டப்படி அனுமதிக்கப்படும் அதிகபட்ச செலவைவிட அதிகமாகச் செலவழிக்கப்படுகிறது; ஆகவே, அத்தொகையை அதிகரிப்பது கண்கூடாக இருக்கும்.

தேர்தல் நடைமுறைக் காலத்தைக் குறைப்பதும் குழுவின் கவனத்தில் உள்ள ஒரு பிரச்சினையாகும்; அதைக் குறைத்தால் செலவும் குறையும் என்று கருதப்படுகிறது.

'தீ'ச்செயலைத் தடுக்கத் தீவிரத் திட்டம்

கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரமாகும்

உடனடியாகப் புலன் விசாரணைக் குழு நியமனம்

முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட அதிகாரிகள் ஆலோசனைக் கூட்ட முடிவுகள்

சென்னை, ஜுன் 18—
சென்னையில் தொடர்ந்து தீ விபத்துக்கள் நீடிப்பது குறித்து முதலமைச்சர் அண்ணா அவர்கள் தலைமையில் உயர்மட்ட ஆலோசனை நடைபெற்றது.

பொதுப் பணித் துறை அமைச்சர், அரசுத் தலைமைச் செயலாளர், போலீசுத் துறை செயலாளர், போலீசு இன்ஸ்பெக்டர்--ஜெனரல், போலீசுக் கமிஷனர், தீயணைப்புப் படைத் தலைமை அதிகாரி ஆகியோரும், மற்றும் பல அதிகாரிகளும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தீ விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுப்பது எப்படி என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது; நிலைமையை உரியவாறு சமாளிப்பதற்காகக் கீழ்க்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன :—

1. தி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்ற அல்லது ஏற்படக்கூடிய சேரிப் பகுதிகளில் 'ரோந்து' நடவடிக்கைகளைத் திவிரப்படுத்துதல்.
2. இந்த பகுதிகளிலுள்ள கண்காணிப்புக் குழுக்களைச் சுறுசுறுப்புடன் இயங்கச் செய்தல்; பெரும் அளவில் அவற்றின் ஒத்துழைப்பைக் கோரிப் பெறுதல்; சீரணியினரின் உதவியையும் பெறுதல்.
3. 'ரோந்து' நடவடிக்கைகளுக்காகப் போலீசுக்கு உதவ ஊர்க்காவல் படையினரை அழைத்தல்.
4. குற்றவாளிகளைப் பிடிக்க உதவும் தகவல் தருவோருக்கு அல்லது குற்றவாளிகளைக் கையும் களவுமாகப் பிடிக்கும் நபருக்கு ரு. 1000 பரிசு அளித்தல்.
5. உடனடியாகப் போலீசு சூப்பிரண்டெண்டு ஒருவர் தலைமையில் தனிப் புலன் விசாரணைக் குழு ஒன்றை நியமித்தல்.
6. நியணைக்கும் படை நிலையங்களிலிருந்து தொலைவில் உள்ள சேரிப் பகுதிகளின் அருகில் நியணைக்கும் எஞ்சின்களை நிறுத்தி வைத்தல்.

போலீசு இன்ஸ்பெக்டர்—ஜெனரல், போலீசுக் கமிஷனர், மூத்த போலீசு அதிகாரிகள் ஆகியோர் சேரிப் பகுதிகளுக்கு அடிக்கடி சென்று, அங்கு செய்யப்படுகின்ற ஏற்பாடுகளை மேற்பார்வையிடுவர்.

தீ விபத்துத் துயர் துடைப்பு--அரசு ஏற்பாடு

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக--நிரந்தரத் திட்டங்கள்

அதிகாரிகள் கூட்டத்தில் ஆலோசனை

சென்னை, ஜுன் 18—
தீ விபத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு என்னென்னவிதத்தில் உதவி அளிப்பது என்பது பற்றி ஆலோசித்து முடிவு செய்ய நில வருமான ஆணையாளர் திரு. என். எஸ். மணி தலைமையில் அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர்.

இதில் போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல், மாநகராட்சி ஆணையர், போலீசு கமிஷனர், சென்னை மாவட்டக் கலெக்டர், வீட்டு வசதி வாரியத் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அடுத்தடுத்து ஏற்பட்டுவரும் சென்னை நகரத் தீ விபத்துக்களைப் பற்றியும், தடுப்பு நடவடிக்கையாக என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பது பற்றியும் அதிகாரிகள் விவாதித்ததாகத் தெரிகிறது!

பாதிக்கப்பட்டிருக்கும் 'மக்களின் மறு வாழ்வுக்காகத் 'தற்காலிக—நிரந்தரத் திட்டங்கள் பற்றி விவாதித்ததாகவும், இது பற்றி முடிவான அறிக்கை அரசிடம் தாக்கல் செய்யப்படும் என்றும் செய்தியாளர்களிடம் மாநகராட்சி ஆணையர் தெரிவித்தார்.

கடமையாற்ற அவசர அழைப்பு

சென்னை, ஜுன் 18—
ஊர்க்காவல் படையைச் சேர்ந்த 500 பேர்களைப் போலீசுக் கமிஷனர் அழைத்து, உரிய கட்டளைகள் பிறப்பித்துள்ளார்.

தீ விபத்து சம்பந்தமான தனி அலுவல்களுக்காகவே அவர்கள் அவசரமாக அழைக்கப்பட்டு உரிய கடமைகளாற்றுவதற்காக உத்தரவிடப்பட்டுள்ளனர்.

நம் நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 ஆனி 5 (18—6—68) செவ்வாய்

பதினாறும் ஆண்டு

இற்றைக்குச் சரியாகப் பதினைந்தாண்டுகட்குமுன்னர், கருத்து ஏடாக 'நம் நாடு' முதல் இதழ், தன் ஒளிமுகம் காட்டியது.

'நம் நாடு' ஏட்டின் ஒளிமுகம் கண்டு, கழகத் தோழர்கள் களிபேருவகை கொண்டனர்.

கழகப் பெருங்காவலர் அறிஞர் அண்ணா அவர்கள் 'நம் நாடு' ஆசிரியராக இருந்து, கருத்துமிகு கட்டுரைகள் நாள் தவறாது தீட்டி வந்தார்கள்.

அறிஞரின் கருத்தோவியங்களை நாள்தோறும் படித்துக் கழகத் தோழர்கள் புத்துணர்ச்சியும் புதுத் தெம்பும் பெற்றதுடன், கழகக் கோட்பாடுகள் பற்றிய தெளிவும் பெற்றனர்.

'நம் நாடு' துவக்கப்பட்ட சில நாட்களுக்குள்ளாகவே, மும்முனைப் போராட்டத்தைத் துவக்கித் தீரவேண்டிய கட்டாயத்தை, அன்பர் ஆச்சாரியார் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட காங்கிரசுக் கட்சி, கழகத்தினமீது வலுவில் திணித்தது.

அம்மும்முனைப் போராட்டத்தின் விளைவாக, 'நம் நாடு' இதழ் ஆசிரியரான அறிஞர் அண்ணா அவர்கள், அரசாங்கம் தொடர்ந்த வழக்கிற்கு ஆளாகி சென்னைச் சிறையில் தள்ளி மூடப்பட்டார்.

அண்ணா அவர்களுடன் சிறைத் தண்டனை ஏற்ற ஒருவர் நீங்கலாக மற்ற தோழர்களான இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன் ஆகிய நால்வரும், சிறை வாழ்வை ஏற்றனர்.

கல்லக்குடிப் போராட்டத் தலைவராகப் பொறுப்பேற்று -- அறப்போரில் ஈடுபட்டு மற்றும் நான்கு தோழர்களுடன் கருணாநிதி அவர்கள் தண்டனைக்குள்ளாகி, திருச்சிச் சிறையில் அடைபட்டு இருந்தார்.

அம்மும்முனைப் போராட்டத்தின் விளைவாக, கழகத்தைத் துவக்குவதற்குக் காரணமாக இருந்தும், துவக்கிய நாள்தொட்டுக் கழக வளர்ச்சிக்காக ஆர்வத்துடன் அரும் பணிபுரிந்தும்வந்து கொண்டிருந்த குறிப்பிடத்தக்க கழகத்தவர் பலரும், சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் தொல்லை அனுபவித்துக்கொண்டிருந்தனர்.

இன்று விவசாய அமைச்சராகப் பொறுப்பேற்றுச் சீரிய முறையில் பணியாற்றிக்கொண்டு வரும் ஏ. கோவிந்தசாமி அவர்கள், அண்ணாவின் ஆணைக்கு உட்பட்டு -- 'பொறுப்பாளர்' என்ற சிறப்பிடம் பெற்று -- அரசியல் நெருக்கடிக்குள்ளாகி இருந்த கழகப் பணிகளை, காங்கிரசு ஆட்சி அஞ்சிடத்தக்க வகையில் செம்மையாகச் செய்துவந்தார்.

அந்த நேரத்தில், கழக ஏடான 'நம் நாடு' 'காங்கிரசு ஆட்சியின் கொடிய அடக்குமுறைகளையும், அவற்றால் விளைந்திட்ட கேடுபாடுகளையும் மக்களுக்கு உணர்த்துவதில், என்றென்றும் நினைவுகூரத்தக்க பெரும் பணிகளைத் திறம்படச் செய்து வந்திருக்கிறது.

அதற்குப் பின்னர், இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கழகத்தின் பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டதுடன், 'நம் நாடு' இதழின் ஆசிரியராகவும் பொறுப்பேற்றார்.

1957-ம் ஆண்டு பொதுத் தேர்தலில், திருச்சி மாநில மாநாட்டில் பங்குகொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்கள் பிறப்பித்த கட்டளைக்கிணங்க, கழகம், தேர்தலில் நேரடியாகப் பங்கு கொண்டது. கழகம் கலந்துகொண்ட அம்முதல் பொதுத் தேர்தலில், அறிஞர் அண்ணா உட்பட பதினைந்தே பேர்கள் வெற்றி பெற்றனர் என்றாலும், அவ்வெற்றிக்கு 'நம் நாடு' செய்திருக்கின்ற பிரசாரப் பணி, என்றென்றும் மறக்கத்தக்கதல்ல.

அறிஞர் அண்ணா தலைமையில், தமிழகச் சட்டப் பேரவையில் எதிர்க் கட்சியினராக இருந்து கழகத்தவர்கள் வெளியிட்டுவந்த அறிவுசான்ற கருத்துக்களையும், நல்லுரைகளையும் வெளியிட்டு, 'நம் நாடு' சிறப்பான தொண்டு செய்திருக்கிறது!

அதற்கு அடுத்தாற்போல், 1962-ம் ஆண்டு பொதுத் தேர்தலில், தமிழகச் சட்டப் பேரவையில் தி. மு. க. அதிகாரபூர்வமான எதிர்க் கட்சியாக ஏற்கப்படுவதற்குரிய எண்ணிக்கையைப் பெறுவதற்கு, 'நம் நாடு' இதழ், தன் ஆற்றலுக்கேற்ற துணையைச் செய்திருக்கிறது.

அடுத்தாற்போல், சென்னை மாநகராட்சியைக் கைப்பற்ற, 'நம் நாடு' குறிப்பிடத்தக்க பிரசார சாதனமாகப் பணிபுரிந்துள்ளது.

இந்த நேரத்தில், கழகத்தின் முன்னைய சட்டத்திற்குட்பட்டு, 'நம் நாடு' இதழின் ஆசிரியர் பொறுப்பை, சி. பி. சிற்றரசு அவர்கள் சிறிதுகாலம் மேற்கொண்டிருந்தார்.

அவரை அடுத்து, மீண்டும் 'நம் நாடு' இதழின் ஆசிரியர் பொறுப்பை இரா. நெடுஞ்செழியன் ஏற்றுக்கொண்டார்.

1967-ம் ஆண்டும் பிறந்தது; பொதுத்தேர்தல் நாளும் வந்தது. பொதுத்தேர்தலில் காங்கிரசு ஆட்சிக்கு முடிவுகட்டிவிட்டனர் மக்கள்; ஆட்சிப் பொறுப்பைக் கழகத்திடம் மனமுவந்து ஒப்படைத்தனர்—அதே மக்கள்.

அறிஞர் அண்ணா அவர்களை முதல்வராகக்கொண்ட அமைச்சரவை அமைந்தது. தமிழகத்தில் பல ஆண்டு இடைவெளிக்குப் பின்னர், நல்லாட்சி—உண்மையான மக்களாட்சி மலர்ந்தது.

அண்ணா அவர்களின் அமைச்சரவையில், கல்வி—தொழில்—அறநிலையப் பாதுகாப்பு—ஆகிய துறைகளின் அமைச்சராக இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன் காரணமாக, 'நம் நாடு' ஆசிரியர் பொறுப்பை, சென்ற ஓராண்டுக்காலத்துக்குக் கொஞ்சம் கூடுதலாக, நாடாளுமன்ற உறுப்பினர் இரா. செழியன் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்.

சின்ன விஷயம்

தம் நிலையின் இழிந்தக் கடை!

'பஞ்சமா பாதகங்கள்' என்று வகுத்துத் தொகுத்துச் சொல்லுகிறார்களே—அதிலும் முதன்மையான பெரும் பாதகம் என்ன தெரியுமா?—

பொய்!

ஒரு வெள்ளையர் இன்னொரு வெள்ளையரைச் சந்தித்தபோது, 'நான் ஒரு தப்புத்தண்டாவுக்குப் போவதில்லை; திருடியதில்லை; கற்பழித்ததில்லை; நம்பியவரை ஏமாற்றியதில்லை; கொலை செய்ததில்லை; மது அருந்தமாட்டேன்; ஆனால்,

'எனக்கு உண்மை மட்டும் பேசத்தெரியாது'

என்று குறிப்பிட்டதாக ஒரு துணுக்கு உண்டு.

பொய்யில்—புனைசுருட்டில் உள்ளடங்கிய கொடுமையினை விளக்கிட இதனை எடுத்துக் காட்டுவார்கள்.

மதிப்புக்குரிய காமராசர், தம் நிலையின் இழிந்துப் புனைந்துரைக்கும் பொய்ப் பேச்சுக்களைக் கேட்கையில், இந்தத் துணுக்கு மட்டுமன்றி, வள்ளுவர் குறளும் நினைவுக்கு வருகிறது!

வெறும் பேச்சுக்காக இதை அவர் பயன்படுத்தினால்கூடப் பரவாயில்லை. மாணவர்களைத் தூண்டிவிட்டு, வெறியாட்டம் போடும்படிச் செய்யத் தமக்குத் தெரிந்த அரைகுறை விஷய ஞானத்தை வைத்துக்கொண்டு பேசுகிறார்!

எதையுமே அரைகுறையாகத் தெரிந்து வைத்திருப்பவரைப் போன்ற ஆபத்தான மனிதர் உலகத்திலேயே யாரும் இருக்கமாட்டார்! இந்தக் காமராசரோ, பொய்க்கு முடிசூட்டுவதற்காக உண்மையைப் பலிபீடத்துக்கு அனுப்புகிறார்!

திருச்சிக்கு அருகே திருவரங்கத்தில் தேசிய மாணவர்கள் தமிழ் வளர்ச்சிக் கவுன்சிலின் சோஷலிஸ்டு முகாம் 7 நாட்கள் நடந்து நிறைவுற்றதாம். கடைசி நாளில் காமராசர் கலந்து கொண்டு 'கருத்து வழங்கினாராம்!'

தேசிய மாணவர்களின் தமிழ் வளர்ச்சிக் கவுன்சில் ஆயிற்றே—தமிழ் வளர்ச்சிக்குப் புதிய யோசனை ஏதும் சொல்லியிருப்பார்; அல்லது சோஷலிச முகாமாயிற்றே—சமதர்மம் பற்றிய பொருளாதாரக் கொள்கை விளக்கம் ஏதும் தந்திருப்பார் என்றுதான் ஆவலுடன் எதிர்பார்ப்பது, யாருக்கும் இயல்பு!

ஆனால் இவரோ, ஏதோ முட்டை திருடிய குற்றத்துக்காக யாரோ ஒரு அரிசனப் பையனைக் கட்டிவைத்துக் கையை எரித்தார்கள் என்ற பழங்கதையைப் பேசி, 'அதையொட்டி யாரையும் கைது செய்யவில்லை; வழக்குத் தொடுக்கவில்லை' என்றெல்லாம் தமிழக அரசின்மீது குற்றஞ்சாட்டி,

எளிதில் உணர்ச்சிவசப்படும் மாணவர் இடையில்--

"அடுக்குமா இது? விடலாமா இதை? மாணவர்களே -- நீங்கள் என்ன செய்கிறீர்கள் -- விழித்தெழுங்கள்! மறியல்கள், கண்டன ஊர்வலங்கள் நடத்துங்கள்! தொடங்குக இன்றே! அச்சந் தவிர்ப்பீர்! நீர் ஆடவர் எனபதை உலகுக்கு உணர்த்துவீர்!"

என்று -- விவேகானந்தர் வீர முரசு கொட்டியதுபோல் -- கொட்டி முழங்கினாராம்!

இந்தோனேஷியாவில் -- சீனாவில் -- ஜப்பானில் -- பிற பிற நாடுகளில் இருப்பதைப்போல், நேரடியாக அரசியலில் பங்கு கொள்ளுங்கள் என்று 'புத்தி' சொல்லி இருக்கிறார் -- இந்தப் புண்ணியவான்!

மாணவர் செயல்பட்டால் அரசு தடுக்க முன் வரும்; கலாம் விளையும்; கலகம் ஏற்படும்; கல்வி நிலையங்கள் மூடப்படும்; குழப்பம் நீடிக்கும்; குழம்பிய அரசியலில் ஆதாயம் தேடலாம் என்று......சே! என்ன அற்பத்தனமான சபலம்!

ஆனால் இந்த அற்பத்தனமான பேராசைக்காக மனமறிந்து பொய் உரைக்கிறாரே --- அவர் நிலைக்கு அது தகுதியா?

அது சரி; அவரை அதிகத் தரமுள்ளவராக மதிப்பிடுவது நம் தவறுதானே!

பேராசைக்காக மனச்சாட்சியை இழப்பது, சாம்பல் வேண்டுமென்பதற்காகப் படத்தை எரிப்பதற்கு ஒப்பானதாகும்!

"'மனச்சாட்சி' என்பது ஒரு கூடு; நன்மை குஞ்சு பொரிப்பது அங்கேதான்" என்பார்கள். அத்தகைய மனச்சாட்சியை அழித்துவிட்டால்......

கழகம் போராட்டம் நடத்திய காலங்களில், தாமே முன்வந்து கலந்துகொள்ள மாணவர் துடித்த நாட்களில், பேரறிஞர் அண்ணா அவர்கள்,

> **"நீங்கள் வேறு வகையில் நாட்டுப் பணி ஆற்றவேண்டியவர்கள். படித்துப் பட்டம் பெற்று நிபுணர்களாகி ஆக்கவழியில் தொண்டு செய்யுங்கள்.**
>
> **"நீங்கள் என் இதயத்தில் இருக்கிறீர்கள். உங்கள் ஆதரவு என்னிடம் முழுமையான ரூபாய் நோட்டுகள் போல் இருக்கட்டும். செலவழிக்கச் சில்லரை இருப்பதுபோல, தியாகம் செய்ய என் தம்பிகள் இருக்கிறார்கள். உங்கள் கவனம் அங்கே போக வேண்டாம்"**

என்று மிகத் தெளிவாக--திட்டவட்டமாக அறிவுறுத்தி இருக்கிறார்கள்!

அது—அறிஞர் அண்ணா! இது—காமராசர்!

பொய்யை ஆதாரமாக்கிப் பிள்ளைகளைத் தொடை தட்டத் தூண்டுகிறாரே காமராசர்!

திருச்சி மாவட்டக் காவல்துறை மேலதிகாரி கே. வி. உன்னிகிருஷ்ணன் அவர்களைச் செய்தியாளர் விசாரித்ததில், நிகழ்ச்சி நடைபெற்ற அன்றே இ. பி. கோ. 307 (கொலை முயற்சி) பிரிவுப்படி ஐவர்மீது வழக்குத் தொடர்ந்திருப்பதாயும், வழக்குப் புலன் விசாரணையில் இருப்பதாயும் தெரிவித்திருக்கிறார்.

ஆகவே, காமராசர் போன்றவர்கள் விஷயம் தெரியாமல் பேசியதாக ஒப்புக்கொள்ள முடியாது.

கொள்கை அடிப்படையில் மாணவர்களிடையில் எதையும் விளக்கிட---பேசிட ஆற்றல் இல்லாமல், உணர்ச்சி ஊட்டிவிட வேண்டுமென்பதற்காக வேண்டுமென்றே பொய்யும் புனைந்துரையும் பேசியிருக்கிறார்!

இந்தப் பொய்ச் சரடுகள் எவ்வளவு காலம் தாங்கும்?

"நாய்கள் குரைக்கட்டும்; இந்த மனிதர்களும் பேசிக் கொண்டிருக்கட்டும்" என்று ஜெர்மன் நாட்டு மக்கள், வேண்டாதவர்களைப் புறக்கணித்து ஒதுக்குவார்களாம்!

அப்படி இவரைப் புறக்கணித்து ஒதுக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை!

- பூரணன்

'நம் நாடு' ஒரு கருத்து நாளிதழாக, பதினைந்தாண்டுகளுக்கு முன் துவங்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை—அண்ணா அவர்களின் விருப்பத்துக்கிணங்க—'கழகத்தின் இலட்சியங்கள்' என நான் உணர்ந்துகொண்டுள்ளதை, இவ்விதழின் வாயிலாக எழுதி வருகின்றேன்.

கழகக் கொள்கைகளுக்கு மிகுதியான வலிவூட்டத்தக்க ஆற்றல் என் எழுத்துக்கு இருக்கிறதா என்பதில் எனக்கே ஐயமுண்டு; ஆனால், கழகத்தின முற்போக்குக் கருத்துக்களுக்கு முரணாக என் எழுத்து இருக்காது—இருக்கமுடியாது என்பது மட்டும் உறுதியிலும் உறுதி.

'நம் நாடு' இதழின் பதினைந்தாண்டுக்கால வெற்றிக்கு உறுதுணையாகப் பலர் இருந்திருக்கின்றனர். அவர்கள் அனைவரும் தந்துவந்த—வருகின்ற ஒத்துழைப்பின் உருபயன் 'நம் நாடு' வெற்றி.

வாசகர்கள், விளம்பரம் தந்துவருவோர், கூட்டு எழுத்தாளர்கள், அச்சுக்கோப்போர், அச்சடிப்போர், அச்சடித்த இதழ்களை ஒருங்கு திரட்டித் தருவோர், நிர்வாகத் துறையினர் ஆகிய அனைவரும் பாராட்டுக்குரியவர். அவர்கள் அனைவருக்கும் எனது வணக்கமும், நன்றிகலந்த பாராட்டும் உரித்தாகுக.

---காஞ்சி கல்யாணசுந்தரன்

நர்சுகள் பணியை கவனிக்கும் இயந்திரம்

மேற்கு ஜெர்மனியில் மருத்துவமனைகளில் கடுமையான நோயால் அவதிப்படுகிறவர்களின் உடல் நிலையை இரவு பகலாய்க் கண்விழித்துக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு நர்சுகளிடமிருந்து தானியங்கிகளுக்கு கைமாறப் போகிறது.

மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளின் நாடித் துடிப்பு, இரத்த ஓட்டம் போன்ற விவரங்களை உடனுக்குடன் கவனமாகவும், இடைவிடாமலும் குறிப்பெடுத்து வைத்தியநிபுணர்களுக்கு அறிவிக்கும் பணியை, தானியங்கிகளிடம் ஒப்படைத்துவிடுவதென்று வெயிஸ்பேடனில் நடைபெற்ற மருத்துவக் கழகத்தின் கூட்டத்தில் முடிவாகியிருக்கிறது.

ஆளுவோர் ஆண்டால் அனைத்தும் நடக்கும்!

வள்ளுவர் காண விழைந்த புத்துலகம் வந்துவிட்டது

திருவள்ளுவர் திருநாள் கருத்தரங்கில் ம. பொ. சிவஞானம் தெளிவுரை

சென்னை, ஜூன் 17—

"திருவள்ளுவர் அகக் கண்ணல் கண்ட புத்துலகத்தை நாம் புறக் கண்ணல் காணப் பாடுபட்டு வருகிறோம்; அந்தப் புத்துலகம் வந்துவிட்டது!

"மாநிலங்கள் இணைந்த 'சென்னை மாநிலத்திலிருந்து தமிழகம் பிரிந்தபோதே புத்துலகம் பூத்துவிட்டது!

"'சட்டத் துறையிலே தமிழ் இருக்கவேண்டும்' என்று விரும்பியதுதான் வள்ளுவர் தமது அகக் கண்ணல் கண்ட புத்துலகமாகும்; அதைக் காண நாம் முயலு கிறோம்!

"நாம் அமைத்திருக்கும் புத்துலகம், 'தமிழ்நாடு' என்ற பெயரேற்ற, வள்ளுவன் காண விரும்பிய புத்துலக மாகும்!

"திருவள்ளுவர் போதகராக இருக்கிறர்--நாம் சாதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்! நாம் போராடுவ தெல்லாம், வள்ளுவர் காண விரும்பிய புத்துலகத் தைக் காண்பதற்காகத்தான்!"

இவ்வாறு திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல் ஏ. அவர்கள், திருவள்ளுவர் திருநாள் கருத்தரங்கில் உரையாற்றுகையில் தெள்ளத் தெளிவுறக் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இன்றையத்தினம் பேருந்துகளி லெல்லாம் திருவள்ளுவர் இருக்கிறர்—குறள் இருக்கிறது! பயணிகள் விடுதிகளிலெல்லாம் திருவள்ளுவர் காட்சியளிக்கிறர்!

தமிழகத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களிலும் திருக்குறள் ஆராய்ச்சிப் பிரிவு இயங்கவும் வழிவகை செய்யப் பட்டிருக்கிற சிறப்பை இன்று காண்கிறோம்!

மத்திய அரசு திருவள்ளுவரின் அஞ்சல் தலையை வெளியிட்டி ருக்கிறது!

இந்த ஆண்டு மத்திய அரசு, விடுமுறையே விட்டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்!

ஆளுவோர் ஆண்டால் அனைத்தும் நடக்கும் என்பதற்கு, இது தகுந்த அறிகுறி!

திருக்குறள் என்பது மொத்த வடிவம்; அதற்குள்ளே இருக்கிற தொகுதிகளையும், தொகுதிகளுக் குள்ளிருக்கும் பகுதிகளையும் பிரித்துப் பார்த்தால் எளிதாகப் பிரியும்!

மொத்தமாக இருப்பது, முப்பால்; அறம்—பொருள்—இன்பம் என்பது முப்பாலாகும்; அது, வள்ளுவர் காண விரும்பிய புத்துலகச் சமுதாயத்தைக்காட்டுவதாகும்!

கார்ல் மார்க்சின் வர்க்க ரீதியான தாக இல்லாமல்—சாணக்கியனின் வருணச்சிரம ரீதியான தாக அல்லாமல், 'ஆண்பால்—பெண்பால்' என்ற அடிப்படையில் அமைந்தது திருக்குறளாகும்!

அறத்துப் பாலில் ஆணுக்குத் தலைமையும், இன்பத்துப் பாலில் பெண்ணுக்குத் தலைமையும், பொருட்பாலில் ஆட்சியாளருக்கு, அரசனுக்குத் தலைமையும் அளிக்கப்படுகிறது!

மொத்தத்திற்கும், 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' என்ருர்.

கார்ல் மார்க்ஸ், தெய்வமற்ற சமுதாயத்தைக் காண விரும்பினர். வள்ளுவரோ தெய்வமுள்ள சமுதாயத்தையே காண்கிருர்! ஆனல், புராணிகர்கள் பௌராணிகர்கள் காட்டிய தெய்வத்தையல்ல — குலத்திற்காக--நாட்டுக்காக--மனித சமுதாயத்திற்காக நல்லது செய்யும் ஆண்டவனைக் கண்டார்!

'நல்லது செய்ய முனைந்தால், தெய்வம் ஓடிவந்து வழிகாட்டும்' என்ருர்! 'உழைக்கிறவன்தான் முன்னுக்கு வரமுடியும்' என்ருர்!

மூட நம்பிக்கை மிகுந்த சமுதாயத்தை மாற்றினர்;

நாடி நரம்புகளிலே ஊறிவிட்ட பழக்க வழக்கங்களை மாற்றப் புதுமுறையில்--புரட்சி கண்டவர் திருவள்ளுவர்!

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்ருர் வள்ளுவர்; 'இருப்பதைப் பகிர்ந்துகொண்டு எல்லாரும் வாழ்ந்திட வேண்டும்' என்ருர்.

காரல் மார்க்சின் 'கேப்பிடல்' தத்துவத்தை ஒரே குறளில் எடுத்து விளக்கிய பெருமை, திருவள்ளுவரையே சாரும்!

வள்ளுவர் கண்ட சமுதாயத்தில், தமிழர் சமுதாயத்தை—இந்தியச் சமுதாயத்தையல்ல—மனித சமுதாயத்தையே காண்கிறோம்!

அவர், உலக மொழிகளெல்லாம் கற்றவரல்லர்; எனினும், புதிய உலகத்தையே காணும் உள்ளம் அவருக்கு இருந்தது!

தமிழைக் கிள்ளுக்கீரையாக எள்ளிநகையாடுகிறவர்கள் வள்ளுவரைப் படித்திருந்தால், அவர்கட்கு அந்தப் புத்தி ஏற்பட்டிருக்காது!

ஏழை நெசவாளிக்கு எப்படி இவ்வளவு விசால அறிவு வந்தது? உலகத்தையே குறளில் காட்ட முடிந்தது என்ருல் அவர் யோக்கியராக --- உத்தமராக இருந்ததால்தான்!

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு' என்பது போல், அறிவு மெய்ப் பொருளைக் காண வேண்டுமானல், சொந்த மொழியில் அனைத்தும் தேவை!

சட்டம் தெரியாத கோடிக்கணக்கான மக்கள் இங்கே இருக்கிருர்கள் என்ருல், அவர்களெல்லாம் சட்டத்தைத் தெரிந்துகொள்ள--பொது அறிவைப் பெற--தாய்மொழியில் நிர்வாகம் நடத்தப் படவேண்டும்.

தமிழிலே நீதிமன்ற நிர்வாகம் நடந்தால்தான், வழக்கின் தன்மையைப் பாமர மனிதன் புரிந்துகொள்ள முடியும்! சட்ட நுணுக்கத்தை அவன் அறியாவிட்டாலும், பொது அறிவைப் பெற முடியும்!"

கோவை விளையாட்டு அரங்கு

அந்தியூர் ஒன்றியத்தின் நன்கொடை

கோவை விளையாட்டு அரங்கத்துக்கு அந்தியூர் ஊராட்சி ஒன்றியம்—ஊராட்சிகள் அனைத்தும் ரூ. 8,251 நன்கொடை அளித்தன

கோவை விளையாட்டு அரங்கத்திற்கு அந்தியூர் ஊராட்சி ஒன்றியமும், ஒன்றியத்தைச் சேர்ந்த 13 ஊராட்சிகளும் நன்கொடை அளிக்க முழு முயற்சி எடுத்துக் கொண்டன.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. கே. கே. சுப்பிரமணியம், ஒன்றியத்தின் ஆணையர் டி. கே. வெங்கடாசலம், மற்றும் எல்லா ஊராட்சிமன்றத் தலைவர்களும் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் எடுத்துக்கொண்டதால், ரூ. 8,251 வரை சேர்த்து அத் தொகையை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விளையாட்டு அரங்கத்துக்கு நன்கொடையாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கைத்தறித் தொழிலின் எதிர்காலம்

சொந்த பலத்துடன் நிற்க வேண்டும்

துணைக் குடியரசுத் தலைவரின் யோசனை

சேலம், ஜூன் 16—

"நாட்டின் பொருளாதார வாழ்வில் கைத்தறி முக்கிய இடம் வகிக்கிறது. இருபது இலட்சத்துக்கு மேற்பட்டோர் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆலைத் துணிகளுடன் போட்டியிட வேண்டியிருந்தாலும், கைத்தறித் துணிக்குக் கிராக்கி இருக்கிறது. நீடித்த உழைப்பும் நல்ல 'மாதிரி' (டிசைன்) அமைப்புகளுமே இதற்குக் காரணம்.

"கைத்தறித் தொழில்கள் சொந்த பலத்திலேயே நிற்க வேண்டும். தரத்தையும் உற்பத்தித் திறனையும் பேணிக் காத்தால்தான் இது இயலும்"

என்று, துணைக் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் மாநாட்டை இங்கு துவக்கிவைத்துப் பேசுகையில் கூறினர்.

மூடிய ஆலைகள் பிரச்சினை

திரு. கிரி, செய்தியாளர்களிடம் பேசுகையில், 'மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பது குறித்துத் தொழிலதிபர்கள் — தொழிலாளர்கள்— அரசு ஆகிய முத்தரப்புப் பிரதிநிதிகளும் கூடிப் பேசவேண்டும்' என்ருர்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் புதிய உயர்நிலைப் பள்ளிகள்

சென்னை, ஜூன் 18—

செங்கற்பட்டு மாவட்டம் திருப்போரூர் வட்டத்தில் உள்ள செம்பாக்கத்தில் அரசினர் உயர்நிலைப் பள்ளி ஒன்றைத் திறக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

அங்கு ஏற்கனவே இயங்கிவரும் ஊராட்சி மன்ற உயர் துவக்கப் பள்ளி அரசினர் உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்படும்; இன்னும் சில நாட்களில் இந்த உயர்நிலைப்பள்ளி திறக்கப்படும்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் தற்போது 103 அரசினர் உயர்நிலைப் பள்ளிகளும், மற்றும் பல தனியார் உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இவ்வாண்டு மேலும் சில உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திருத்தணி வட்டத்தில் காவேரி ராசபுரத்தி[illegible] காஞ்சி வட்டத்தில் ஊத்து[illegible]லும் உயர்நிலைப் பள்ளிகள் திறக்கும் யோசனை ஆய்வில் இருந்து வருகிறது.

டெண்டர் அறிக்கை

பொதுப் பணித்துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட அனுபவமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிட்டுள்ள வேலைகளை மேற்கொண்டு கட்டி முடிக்க 27—6—68 மாலை 5-30 வரை முத்திரையிட்ட டெண்டர்கள் வரவேற்கப்படுகின்றன. இவைகளுக்குத் தேவையான டெண்டர் பாரங்களையும் வரை படங்களையும் ஆலை அலுவலகத்தில் பிரதி வேலைக்கும் ரூ. 5 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம. மேலும் தேவையான விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

வ. எண்	வேலை விவரம்	டேவணித் தொகை	முடிக்கும் காலம்
1.	விருந்தினர் விடுதி கட்டும் வேலை	ரூ. 2,500	3 மாதங்கள்
2.	கடைநிலை ஊழியர்கள் தங்கும் வீடுகள் கட்டும் வேலை	ரூ. 1,375	2 மாதங்கள்

டெண்டர்கள் 28—6—68 அன்று பிரிக்கப்படும். ஒவ்வொரு டெண்டரும் மேற்குறிப்பிட்ட டேவணித் தொகையுடன் அனுப்பப்பட வேண்டும்.

கே. பி. சீனிவாசன்,
பொது நிர்வாகி (பொறுப்பிருப்பு)
கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்,
மூங்கில்துரைப்பட்டு அஞ்சல், தென் ஆற்காடு மாவட்டம்.

அஞ்சல் கட்டண மாறுதல்

பொதுமக்கள் கவனத்துக்கு:

அஞ்சல் கட்டணங்கள் இந்த ஆண்டு மே 15-ம் நாளிலிருந்து மாற்றப்பட்டிருக்கின்றன; இருப்பினும், அஞ்சல் கட்டண மாற்றங்களைப் பற்றிச் சரியாக அறியாததன் காரணமாகச் செய்யப்படும் பல பொருள்களுக்குப் போதிய தலைகள் ஒட்டப்படுவது இல்லை இதனல் அஞ்சல்களைப் பெறுபவர்கள் தொல்லைக்குள்ளாகிருர்கள்.

எனவே, அஞ்சல்களை அனுப்பு முன் கட்டண விகிதம் சம்பந்தமாக அஞ்சல் நிலையங்களில் விசாரிக்குமாறு பொதுமக்கள் கோரப்படுகிருர்கள்.

அஞ்சல் கட்டண மாறுதல்கள் வருமாறு:—

1.	கவர்கள் (வர்த்தக ரிப்ளை கவர்கள் உட்பட) 15 கிராம் எடை வரை	20-காசு
	அடுத்த ஒவ்வொரு 15 கிராமுக்கோ அதன் பகுதிக்கோ	15-காசு
2.	தனி அஞ்சல் கார்டு	10-காசு
	ரிப்ளை கார்டு	20-காசு
3.	உள்நாட்டுக் கடிதமடல் (இண்லாண்டு கவர்)	15-காசு
4.	புத்தகம், மாதிரி பாக்கெட்டுகள் 50-கிராம் எடைவரை	15-காசு
	அடுத்த ஒவ்வொரு 25 கிராமுக்கோ அதன் பகுதிக்கோ	10-காசு

தமிழ் இயக்க ஒன்றியத் தொடக்க விழா

தமிழ் வளர்க்கும் மன்றங்கள் ஒன்று சேர்ந்து தமிழ்ப் பணியாற்றுவதற்காக அமைத்துள்ள 'தமிழ் இயக்க ஒன்றிய'த்தின் தொடக்க விழா, தஞ்சைக் கலைக் கூடம் அரண்மனைத் திறந்தவெளி அரங்கில் 9—6—68-ல் நடைபெற்றது; செயலாளர் நெல்லை பா. வளன்அரசு எம்.ஏ. வரவேற்ருர்.

ஒன்றியத்தின் தலைவர் புலவர் தி. பாலசுப்பிரமணியன் தலைமையில் முத்தமிழ்க் காவலர் கி ஆ.பெ. விசுவநாதம் தொடக்கவுரை நிகழ்த்தினர்.

கூட்டத்தில் பின்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

திருவள்ளுவர் திருநாள் விடுமுறையைத் தை 4-ஆம் நாளாக உறுதி செய்யவும், தமிழில் தொழியியல் நுட்ப நூல்களை வெளியிடவும், 'இராவண காவியம்', 'இரணியன்' ஆகிய நூல்களின்மீதுள்ள தடையை அகற்றிடவும் தமிழக அரசை வேண்டுகின்றது.

தமிழகப் பல்கலைக் கழகங்கள் மூன்றிலும் 'திருக்குறள் பொருட்காட்சி நிலைய'ங்கள் நிறுவிடவும், தமிழ் மக்கள் நாட் காட்டிகளில் சுற்றும், கும்பம் முதலிய தமிழ்த் திங்கள் பெயர்களையே பயன்படுத்தவும் வேண்டுகின்றது.

ஒன்றியத் துணைச்செயலாளர் த. அன்பு நிலவன் நன்றி கூறினர்.

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்,
மூங்கில்துரைப்பட்டு & அஞ்சல்,
(வழி) சங்கராபுரம்,
தெ. ஆ. மாவட்டம்

விற்பனைக்கு

1963 மாடல் அம்பாசடர் கார்
1961 மாடல் வில்லிஸ் ஜீப்
டி. வி. எஸ். பாடியுடன்

27—6—68 அன்று மாலை 3 மணிக்கு மேலே கண்டுள்ள இரண்டு வாகனங்களையும் ஆலை அலுவலகத்தில் ஏலத்திற்கு விடப்படும். வாங்குவதற்கு விருப்பமுள்ளவர்கள் அலுவலக நேரத்தில் காலை 9 மணியிலிருந்து மாலை 5-30 மணிக்குள்ளாக ஆலைக்கு வந்து வாகனங்களைப் பார்வையிடலாம்.

ஏலம் கோர விரும்புவோர் ஒவ்வொரு வாகனத்திற்கும் ரூ. 500 முன்பணமாகக் கட்டவேண்டும். இந்த முன்பணம் அதிக பட்சம் ஏலம் கோரியவர் தவிர மற்றவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். மற்ற விதிமுறைகளுக்கு விண்ணப்பித்து எழுதலாம்.

கே. பி. சீனிவாசன்
பொது நிர்வாகி (பொறுப்பிருப்பு)

பெற்றோர்களை மிஞ்சும் பிள்ளைகள்!

தற்போதைய குழந்தைகள், 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த குழந்தைகளுடன் ஒப்பிடும்போது அதிக அறிவு படைத்தவர்களாக இருக்கிருர்கள்!

பெற்றோர்களைவிடத் தற்காலக் குழந்தைகள், 'மக்கு'களாக வளர வில்லை!

20 ஆண்டுகளுக்கு முன்பிருந்த குழந்தைகளைவிட இப்போதைய குழந்தைகள் அதிகமான அளவு கற்கிருர்கள்!

நாகரீகத்தின் பெயரால் கவனத்தைச் சிதறடிக்கும் பலவித சாதனங்கள் வந்தபோதிலும், குழந்தைகள் கவனம் செலுத்திப் படித்து வருகிருர்கள்!

மேற்கு பெர்லின் நகரிலுள்ள சுதந்தரப் பல்கலைக் கழகக் கல்வி விஞ்ஞான நிலையத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றும் டாக்டர் சார்லின் இசன்சாம்ப் இது குறித்து ஆராய்ந்து இம்முடிவுக்கு வந்திருக்கிருர்.

நெய்வேலி--தாண்டவன்குப்பம் அண்ணு மன்றம்

மேற்படி மன்றப் பேரவைக் கூட்டம் 9—6—68-ல் தோழர் ச. ஆண்டகுருநாதன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: பி. ஆறுமுகம்; செயலாளர்: மா மணி; துணைச்செயலாளர்: இ. இருதயம்; பொருளாளர்: மு. சின்னப்பன்; மேலமைப்புப் பிரதிநிதி: எஸ். பாலசுப்பிரமணியன்; செயற்குழு உறுப்பினர்கள்: கோ. முருகையன், ஜே எஸ். இராசன், மா. மாணிக்கம், ஜி. மஸ்கர் ஷெரீப், வி. எம். முத்து, அடைக்கலம், ஜி. கே. கோபால கிருட்டிணன், நாராயணமூர்த்தி, க. தட்சிணமூர்த்தி.

இது காமராசருக்கு மட்டும்:

இமானுவேல்-நினைவில்லையா?

'தூண்டுவதுதான் அரசியல் தொண்டு' என மனம் துணிந்திருக்கிறார் காங்கிரசின் முன்னாள் அனைத்திந்தியத் தலைவர்!

'குறி சரியில்லையேல், எறியும் கல் திருப்பித் தாக்கும்' என்ற சாதாரண அனுபவம், அசாதாரணமான அரசியல் நிலைமைகளையெல்லாம் சமாளித்துள்ளதாகக் கூறப்படும் இந்தப் பெருந் தலைவருக்குத் தெரியாதிருக்க நியாயமில்லை!

சென்ற வேகத்திலேயே மீண்டும் தமிழக அரசியலுக்குத் திரும்பியிருக்கும் காமராசர்—அரிசன மக்களையும், மாணவர் சமுதாயத்தையும் வைத்துக் கொண்டு, தமது எஞ்சிய அரசியல் பொழுதைச் 'சுவைபட'க் கழித்துவிடலாம் எனத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

கேட்பவர்கள் உணர்ச்சிவசப் படக்கூடிய சில செய்திகளை—எளிதில் உணர்ச்சிவயப்படக் கூடியவர்கள் முன்னிலையில்—உண்மை நிலைக்கு மாறாகக் கூட்டியும் குறைத்தும் பேசி—தமிழக அரசியலில் ஒரு பதட்ட நிலையை உண்டாக்கப் பார்ப்பதாகத் தெரிகிறது—காமராசரின் ஒரு சில நடவடிக்கைகள்!

சிறு திருட்டுக் குற்றம் ஒன்றிற்காக 21-வயதுள்ள அரிசன இளைஞன் ஒருவன், கைகள் கட்டப்பட்டு -- விரல்கள் கொளுத்தப்பட்டிருக்கிறான் குளித்தலைக்கு அருகிலுள்ள நச்சலூர் என்ற கிராமத்தில்!

சம்பவம் நடந்திருப்பது, மார்ச் 16-ந் தேதியன்று!

காயத்துடன் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, கடந்த 16-ந் தேதியன்று வீடு திரும்பியிருக்கும் அந்தத் தோழனைப்பற்றிய சில செய்திகளை—அரசியல் இலாபம் தேடும் முயற்சியினால்—தெரிந்தோ தெரியாமலோ ஊதிப் பெரிதுபடுத்தியிருக்கிறார்!

குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கப் போலீசும், சட்டமும் இருக்கும்போது, அதற்கு மாறாக,—கொடுமைகளை ஆயுதமாக மேற்கொள்வது யாருக்கும் உடன்பாடான கருத்தாக இருக்கமுடியாது!

நச்சலூர் சம்பவத்தினை இந்தக் கண்கொண்டு மட்டும் காமராசர் விமர்சித்திருந்தால், அவரை மனம் விட்டுப் பாராட்டலாம்; ஆனால், விரல்களை இழந்திருக்கும் பரிதாபத்துக்குரிய அரிசனத் தோழன், பதவி இழந்திருக்கும் தமது கட்சியைத்தான் அவருக்கு நினைவுபடுத்தியிருக்கிறான்.

★ குற்றத்துக்காகக் கொடுந் தண்டனை இழைக்கப்பட்டிருப்பதனை சட்டப் பிரச்சினையாகக் கருதாமல், முதலில், சாதிப் பிரச்சினையாகக் கருதிப் பேசியிருக்கிறார்!

★ 'இதுபோன்ற கொடுமைகள் கூடாது' என்று தக்க அறிவுரை கூற வேண்டிய பொறுப்பில் இருப்பவர், மாணவர் சமுதாயத்தினை அறைகூவி அழைக்கிறார்—எதற்காக?—ஊர்வலம் நடத்தவேண்டுமாம்; ஆர்ப்பாட்டம் நிகழ்த்தவேண்டுமாம்; எதிர்ப்புகள் காட்டவேண்டுமாம்!

'நச்சலூர் சம்பவம், சாதி வேற்றுமையினால்தான் நிகழ்ந்தது' எனத் தாமாகவே ஒரு முடிவினை ஏற்படுத்திக் கொண்டு மேலே சென்று பேசியிருக்கிறார் காமராசர்!

'குற்றம்' என்ற ஒரு காரணத்துக்காகப் பொறுப்பற்ற தன்மையினால்--நெஞ்சில் ஈரமில்லாத போக்கினால்--விளைவுகளை எதிர்நோக்காமல் செய்த கொடுமையாகவும் இருக்கலாம்—நச்சலூரில் அரிசன சிறுவன் தண்டிக்கப்பட்டிருப்பது!

ஆனால், அதற்கு 'சாதிப் பூச்சு'த் தரும் போக்கில்--தூண்டிவிடும் தொண்டில் ஈடுபட்டிருக்கிறார் காமராசர்!

“இந்த மாமன்றத்திலே பேச வேண்டும் என ஆர்வமுடன் காத்திருந்த நேரங்கள் பல உண்டு; ஆனால் இப்போதோ, கிடைத்திருக்கிற சந்தர்ப்பத்திலும் எதும் பேசாமல் இருப்பதையே விரும்புகிறேன்”

என்ற கருத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகச் சட்டமன்றத்தில் ஒரு குரல் கேட்டது!

தமிழகத்தின் தென் கோடியில் துப்பாக்கிச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்த நேரம் அது!

சிவந்த மண்ணை--தங்கள் உடலிலிருந்து பீறிட்டுக் கிளம்பிய குருதியினால்--மேலும் சிவப்பாக்கிக் கொண்டிருந்தனர் முதுகுளத்தூரில் அரிசன மக்கள்!

கூட்டம் கூட்டமாக—குடும்பம் குடும்பமாக உயிருடன் கொலை செய்யப்பட்ட அந்த வகுப்பினரைப் பற்றிய அவல நிலைமைகள்--அப்போது சட்டமன்றத்தில் -- ஆட்சியிலிருந்த காங்கிரசுக் கட்சி உறுப்பினர் ஒருவராலேயே கோபாவேசத்துடன் எடுத்துரைக்கப்பட்டது.

அந்த நேரத்தில்தான்—சந்தர்ப்பத்தை அரசியல் முதலாக்கிக் கொள்ளலாமே என்ற கீழ்த்தர அரசியலில் நாட்டம் இல்லாத அண்ணா அவர்கள்—எதிர்க் கட்சித் தலைவராக இருந்த நிலையிலும், 'நான் ஏதும் பேசாமல் இருக்க விரும்புகிறேன்' என்று கூறினார்!

இருந்தாலும், கொடுமைகளுக்கு ஆளானவர்கள் யார் என்பதனைக் காட்ட—அப்போது சென்னையில் நடந்த பொதுக் கூட்டமொன்றில்—பெயர் சூட்டுமாறு கொண்டுவரப்பட்ட குழந்தை ஒன்றுக்கு, **'இமானுவேல்'** என்ற பெயரிட்டு, தமது இதயத்தைத் திறந்து காட்டினார்!

'பெருந் தலைவர்' என்று தனிமைப்படுத்திப் பாராட்டப்படும் காமராசர், தனியாகவேனும் ஒரு சில நிமிட நேரம் அண்ணாவின் இந்தப் பெருந்தன்மையினைக் காட்டும் அந்தப் பழமை நினைவுகளை மனத்திரையில் ஒருமுறை பார்த்துக் கொள்ளட்டும்! பின்னர், 'நச்சலூர் சம்பவம் பற்றி நாம் பேசியது சரியா' என அவர் முடிவுசெய்யட்டும்!

அரிசன மக்களின் கனிவினைப் பெறுவதற்காகக் காமராசர், 'கழக அரசுக்கும்—அவர்களுக்கும் ஒரு காழ்ப்பு உணர்ச்சி ஏற்பட்டால்தான் முடியும்' எனத் தப்புக்கணக்குப் போட்டிருப்பதாகத் தெரிகிறது!

அரிசன இளைஞனைக் கொடுந் தண்டனைக்கு ஆளாக்கிய குற்றத்துக்காக மார்ச் 16-ந்தேதியன்றே நால்வர்மீது வழக்குப் பதிவாகி விசாரணையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆனால் காமராசரோ, 'அரசாங்கம் ஏதும் செய்யவில்லை; போலீசு வழக்குத் தொடரவில்லை' என்ற அவதூறுகளை மனந்துணிந்து பொது மேடையில் அள்ளி வீசியிருக்கிறார்!

உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டுப் பேசி அதற்கு இரையாக மாணவர்களையும் அறைகூவி அழைக்கிறார்!

அவரே சரிவரப் புரிந்துகொள்ளாத ஒரு சம்பவத்துக்காக மாணவர்களைப் போராட அழைத்திருக்கிறார்!

'சட்டமன்றம் இருக்கும்போது, வெளியே போராட்டம் எதற்கு' என்று அன்றொரு நாள் கேட்டவர், இன்று அவரது கட்சியினர் ஐம்பது பேர் 'செயின்ட் ஜார்ஜ் கோட்டையில்' சட்டமன்ற உறுப்பினர்களாக வந்து போய்க் கொண்டிருப்பதனையும் மறந்துவிட்டு, 'மாணவர்களே—போராடுங்கள்' என மன்றாடுகிறார்!

★ **மீசையை ஏன் முறுக்கிவிட்டிருக்கிறாய்' எனக் கேட்டு, அரிசன வாலிபன் ஒருவனை அடித்தே சித்திரவதை செய்தனர்!**

★ **அரிசன வகுப்பைச் சார்ந்த ஒருவன் திருடியதற்காக, அவனது மனைவியை நிர்வாணமாக்கித் தெருவில் ஓடவிட்டுத் தண்டித்தனர்!**

,**ஒன்றுக்கும் இலாயக்கற்றவர்கள்; உதைத்து வெளியேற்றப்பட வேண்டி[illegible]** என **அமைச்சர் ஒருவரே கூறினார் என்பதற்காக, இந்தியாவே அமளிப்பட்டது சில நாட்களுக்கு முன்!**

இவை அனைத்தும் காங்கிரசுக் கட்சி அரசாளும் இடங்களில்!

அப்போதெல்லாம், 'அமைதி காத்த' காமராசர், இப்போது மௌனம் கலைத்துப் புறப்பட்டு மாணவர்களைப் போராட அழைக்கிறார்!

சிறந்த அரசியல் தொண்டு! ஈரமுள்ள நெஞ்சு! வீரமுள்ள பொதுமேடைப் பேச்சு!

'காகமே, ஒரு பாட்டுப் பாடு' என—அதன் வாயில் இருந்த வடையின்மீது நாட்டம் கொண்டு—வேண்டுகோள் விட்டதாம் காட்டு நரி ஒன்று!

—எஸ். ஆர்.

வானொலி நிலையத்தின் மீது

மிசோக்கள் குண்டு வீச்சு

இம்பால், ஜுன் 1[illegible]—

150-க்கும் மேற்பட்ட மிஜோ கலகக்காரர்கள் இங்கிருந்து 17-மைல் தூரமுள்ள 'முட்பாங்' என்ற கிராமத்தில் புகுந்து அங்குள்ள இரண்டு பேர்களைக் கொன்று கிராமம் முழுவதிலும் உள்ள நகைகளையும், ரூபாய்களையும் கொள்ளையடித்துச் சென்று விட்டனர்.

மிஜோமலைப் பகுதியைச் சார்ந்ததும் அப்பகுதியின் தலைநகருமான அஜ்ஜல் என்னுமிடத்தில் உள்ள அனைத்திந்திய வானொலி நிலையத்தின் மீது வீசப்பட்ட குண்டுவீச்சின் காரணமாக ஒரு போலீசுக்காரர் கொல்லப்பட்டதுடன, இரண்டுபேர் காயமுற்றனர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

19--6--68

திருச்சி

என். எஸ் கே. படிப்பகச் சார்பில் மாலை 6 மணிக்கு புத்தூர் வன்னியம்பதி திரு. வி. க. நகரில்; தலைவர்: பி. ஏ. சின் சின்னப்பன்; பேசுவோர்: எம். எஸ். மணி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., அ நடராசன், த. செவந்திலிங்கம் எஸ்.ஏ.ஜி. ராபி, ஏ.வி. கிருஷ்ணமூர்த்தி, வி. கிருஷ்ணமூர்த்தி, வை. இராமசாமி, வி. மாணிக்கம் கே. புருஷோத்தமன்.

(தேவராசன்—நிர்மலா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

20--6--68

திருப்பாசூர்

முத்தமிழ் மன்றச் சார்பில் வெளிநாடு சென்று திரும்பிய அமைச்சர் சத்தியவாணி முத்து அவர்கட்கு வரவேற்பும், டி கே. பொன்னுவேலு எம். எல் சி., அவர்கட்குப் பாராட்டும்; மாலை 6 மணிக்கு புதிய திருப்பாசூரில்; தலைவர்: டி. எல். வாசுதேவன்; வரவேற்பாளர்: எஸ். எம். துரைராசு எம்.எல்.ஏ., பாராட்டுவோர் காஞ்சி. கல்யாணசுந்தரம், து எத்திராசன், நீடின்பன், டி. ஆர். வரதன். டி. நாகரத்தினம் பி ஏ. பி.எல்., எம். செல்வராசு பி.எஸ். சி.,பி.எல்., ஏ. கே. சாமி, ஆர். பார்த்தசாரதி, எல். முருகேசன்.

இனுங்கூர்

தி. மு. க[illegible] சார்பில் மாலை 6-30 மணிக்கு சுக்காம்பட்டி கோயில் திடலில்; தலைவர்: போ. கிருட்டினன்; பேசுவோர்: எம். கந்தசாமி எம்.எல்.ஏ., நெடுமாறன் ஆ. பெ. கிருட்டினன், என். பாலன், வி. சிவராஜ், தியாகராசன். மதுரைகண்ணம்மா—தங்கராசு குழுவினரின் கலைநிகழ்ச்சி நடைபெறும்.

சென்னை 15-வது வட்டம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் வெளிநாடு சென்று திரும்பிய ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கட்குப் பாராட்டு; மாலை 7 மணிக்கு ஜில்ஸ் தெருவில் (பிராட்வே தியேட்டர் அருகில்); தலைவர்: வி. நாராயணசாமி; பேசுவோர்: அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா, கி. மனோகரன் எம்.பி., சிட்டிபாபு எம்.பி., அ. அ. ஜின்னா, எஸ். பி. சற்குணம், ந. முருகேசனார், ந. இராமதாசு, ந. பொன்னுசாமி. கே. டி. நாகப்பன், இளஞ்சேரன் அ. தம்பிராசன்.

மதுரை

29-வது வட்டார தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு தெற்கு மாசிவீதி மறவர் சாவடி எதிரில்; தலைவர்: செ. இராமசாமி; பேசுவோர்: நன்னிலம் நடராசன், சொ. கோவிந்தராசன் எம். எல்.ஏ, கு. திருப்பதி பி ஏ பி எல் கே. எஸ். சநதானம் எம்.சி., ஆர். கே. சாந்துலால், எஸ். நாச்சியப்பன்.

திருத்தம்

நேற்றைய 'நம் நாடு' இதழில் 3-ம் பக்கத்தில் 'கொள்கைக் குழப்பம்' என்ற தலைப்பில் வெளியான செய்தியில் 'கு. மா. பாலசுப்பிரமணியம்' என்று வெளியாகியுள்ள பெயரை கே. எம் சுப்பிரமணியம்' என்று திருத்திப் படிக்குமாறு வேண்டுகிறோம்.

—ஆசிரியர்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு. சென்னை-13) அச்சிட்டு [illegible]

காதில் விழுந்தது!

"'பாவிகளே! ஆயுதம் வாங்குவதற்கு உங்களுக்குப் பகையாளிதான் கிடைத்தானா?' என்று கேட்டால், கலக நாகர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா?"

"ஆமாம்; நானும் படித்தேன்; 'வேண்டுமானால் உங்களுடன் ஒரு வியாபார ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறோம்; உதவி செய்யத் தயார்தானா?' எனக் கேட்டிருக்கிறார்கள் இந்தியாவை நோக்கி!"

"ஆட்டைக் கடித்து—மாட்டைக் கடித்து—பின் மனிதனையே கடித்த கதைதான் நினைவுக்கு வருகிறது!"

"அதுகூட அவ்வளவு பொருத்தமில்லை; எனது நண்பரொருவர் சொல்லிய அனுபவம்தான் முற்றிலும் சரி."

"என்ன அது?"

"பணத்தைத் திருடியதும் அல்லாமல், அதனை, பீடி-சிகரெட்டுக்குப் பயன்படுத்திய தனது மகனை நோக்கி, 'திருடியதும் அல்லாமல், அந்தப் பணத்தை இப்படியா பாழாக்குகிறாய்?' என்றாராம்."

"அதற்கு, பையன் என்ன சொன்னான்?"

"'நேரடியாகக் கொடுத்து விடுங்களேன்; அதற்குப் பின் எதற்காகத் திருடுகிறேன்?' என்றானாம்.

"நாசவேலைகளுக்காக மறைமுக வழிகளில் சீனாவிலிருந்து தளவாடங்களைப் பெற்றுவரும் நாகர்கள், 'உங்களுடன் வேண்டுமானாலும் ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறோம்—கொடுங்களேன் ஆயுதங்களை' எனக் கூறியிருப்பது, வேதனை கலந்த வேடிக்கைதான்!"

"சரியாகச் சொன்னாய்! வேதனை—வேடிக்கை இரண்டும் சேர்ந்ததுதான் இந்திய அரசுக்கு நாகர்கள் கொடுக்கும் தொல்லைகள்! தனி அரசு—தனி அமைச்சர்கள்—தனி அஞ்சல்தலை—இப்படி இரட்டை ஆட்சி அல்லவா நடக்கிறது நாகாலாந்தில்!"

"'அமெரிக்காவினாலேயே வியட்காங் படையினரை அடக்க முடியவில்லையே' என்று சுலபத்தில் கேட்டுவிடுகிறார்கள்; இங்கே, நாமும்தான் பார்க்கிறோம்—கலக நாகர்கள் கதையை!"

—எஸ். ஆர்.

டாக்டர் இலக்குவனார் ஐதராபாத் பயணம்

சென்னை, ஜுன் 18—

சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராக இருந்து வந்த பேராசிரியர் டாக்டர் சி. இல[illegible]க்குவனார் அவர்கள், உஸ்மானி[illegible] பல்கலைக் கழகத்திற்குத் தமிழ்த்துறைத் தலைவராகத் தமிழக அரசினால் அனு[illegible]ப்பப்படுகிறார். அப்பதவியேற்க, திரு. இலக்குவனார் அவர்கள் 19—6—68 பிற்பகல் 1-30 மணியளவில், சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து ஐதராபாத் விரைவு வண்டியில் பயணமாகிறார். அன்பர்கள் திரளாக வந்து வழியனு[illegible]ப்பிவைக்குமாறு செந்தமிழ்க் கவிஞர், எழுத்தாளர் பேரவைப் பொதுச் செயலாளர் சிறுவை மோகனசுந்தரம் கேட்டுக்கொள்கிறார்.